**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 01.04.2026**
**EA. No. 19/2025 in EP.No.16/2015**
**வழக்கு சாட்சி RW.2–சித்தையன் , த/பெ. பழனியப்பன்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து 9, 11 முதல் 14, 16, 19 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**9, 11 முதல் 14, 16, 19 வரையிலான எதிர்மனுதாரர்கள் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) நான் எனக்காகவும், பழனியப்பனின் வாரிசுதாரர்களுக்கும் சேர்த்து தான் சாட்சியம் அளிக்கிறேன். அசல் நிறைவேற்றுதல் மனுவை முதலில் என் தகப்பனார் பழனியப்பன் மட்டும் தான் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அவர் 2016 ல் இறந்துவிட்டார். 31.03.2005 ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காகத்தான் என் தகப்பனார் இந்த நிறைவேற்றுதல் மனுவை தாக்கல் செய்தார் என்றால் சரிதான். நாங்கள் தீர்ப்பாண தேதியிலிருந்து 3 வருடத்திற்குள் நிறைவேற்றுதல் மனு தாக்கல் செய்திருக்கவேண்டும் என்றும், ஆனால் நாங்கள் 7 வருடங்கள் கழித்து தாக்கல் செய்துள்ளதால் இந்த மனு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அதை மறைக்கவேண்டும் என்பதற்காகத்தான் இந்த மனுவின் மனுதாரர்களை தூண்டிவிட்டு இவ்வாறான மனுவை தாக்கல் செய்ய வைத்திருக்கிறேன் என்றால் சரியல்ல.

2) இந்த மனுவில் அ.வ.எண்.135/2001 என்ற வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட பிராது மற்றும் பதிலுரையை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளோம். நான் சொல்வது தவறு என்றும், அந்த வழக்கின் தீர்ப்புரையை மட்டும் தான் நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அந்த தீர்ப்புரையில் சரியான தரப்பினர்களை சேர்க்கவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 20 ஆண்டுகளுக்கு முன்பே வாய்மொழியாக பாகம் பிரிக்கபட்டதாக சொல்லியுள்ளது தவறு என்று என் பதிலுரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி

தீர்ப்புரையிலேயே சரியான தரப்பினர்களை சேர்க்கவில்லை என்றும், பாகம் பிரிக்கப்பட்டது தவறு என்றும் இரண்டாவது எழுவினாவாக வனையப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியவில்லை.

3) இந்த வழக்கில் பாகபிரிவினை ஏற்படவில்லை என்று சொல்லிவிட்டு, தற்போது நாங்கள் பிரித்து கொண்டதாக தவறாக சங்கதிகள் குறிப்பிட்டு, அதற்கு ஆதரவாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நிறைவேற்றுதல் மனுவில் காலம் 4 ல் 10.09.2014 ம் தேதியில் 2 ம் மேல்முறையீடுமுடிக்கப்பட்டதாக சொல்லியுள்ளோம் என்றால் சரிதான். ஆனால் இந்த மனுவில் தாக்கல் செய்துள்ள எதிருரையுடன் கூடிய தீர்ப்பானது 2022 ல் முடிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 2021 ல் தான் தீர்ப்பு வழங்கப்பட்டது.

4) 2 ம் மேல்முறையீடானது காணொலி மூலம் விசாரிக்கப்பட்டதால் தற்போது நேரடி விசாரணை வேண்டும் என்று கேட்டு மனு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையிலுள்ளது என்றால் சரியல்ல. என் நிரூபண வாக்குமூலத்தில் ச.எண்.62/1F2 நிலத்தில் அமைந்துள்ள கிணற்றிலிருந்து ச.எண்.62/1E வழியாக விவசாயத்திற்கு தண்ணீர் எடுத்து செல்லும் உரிமை உள்ளது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். ச.எண்.62/1E என்பது தற்போது நிலையில் இல்லை என்றும், அது 7 உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது என்றும், ஆனால் அது எந்த உட்பிரிவு என்று குறிப்பாக சொல்லவில்லை என்றால் நாங்கள் வழக்கு தாக்கல் செய்தபோது அது ச.எண்.62/1E ஆக தான் இருந்தது.

5) தவறான சர்வே எண் குறிப்பிட்டு உத்தரவு வழங்கப்பட்டுள்ளதால் தான் சீராய்வு மனு தாக்கல் செய்யப்பட்டு, நிலுவையிலுள்ளது என்றால் சரியல்ல. மற்ற எதிர்மனுதாரர்கள் குடும்பத்தினர்களிடையே பாகம் பிரித்து கொள்வதற்கு எனக்கு ஏதேனும் ஆட்சேபனை உள்ளதா என்றால் எனக்கு ஆட்சேபனை எதுவும் இல்லை. மனுதாரர்கள் கோரியுள்ள கோரிக்கைக்கு பதில் சொல்லவேண்டியது மற்ற எதிர்மனுதாரர்கள் தான் என்றும்,

நாங்கள் தவறாக அதற்கு இல்லை என்று மறுப்பு தெரிவித்து பதில் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. என் சாட்சியமே ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அதனால் அசல் நிறைவேற்று மனு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

ஒம்/—திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.